FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318710

1. District : Coimbatore PS: Vigilance & Anti Corruption Year: 2026 FIR No.: 2/2026/De/CB Date: 09.02.2026 07.00 hrs
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: as amended in 2018 Sections பிரிவுகள்: -
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: -
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 04.02.2026 Date to : 05.02.2026
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 1130 hrs நாள் வரை 1720 hrs
   Time Period : Time from : Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 07.02.2026 Time : 1800 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) GD Vol-I Time : 1800 hrs
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Tamil typed
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South west about 7 km
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : - (b) Address : O/o Assistant Commissioner (ST) Singanallur North Circle Dr. Balasundaram road Coimbatore.
   முறைக் காவல் எண் முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : N. ADINESH (b) Father's/ Husband's Name : Nagaraj
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 29/2026 (d) Nationality : Indian (e) Passport No. : -
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Accountant (g) Address : 58-26, Thaiyal Nayagar Thaliyur. Post, Thondamuthur Coimbatore Dist
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tmt. Mayaswari, Assistant Commissioner (ST) Singanallur North Circle, Dr. Balasundaram road Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

N. Abinesh (9.2.26)

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

9/2/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. Arumugam
Rank: நிலை Inspector of Police No. எண்
VCPL,
Coimbatore

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2026/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.C8318710 ன் தொடர்ச்சி–

சனிக்கிழமை 07.02.2026 ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திரு.G.ஆறுமுகம் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை, தொண்டாமுத்தூர், தாளியூர் அஞ்சல், திப்பையா நகரில், கதவு எண்.58–26 ல் வசிக்கும் நாகராஜ் என்பவரது மகன் N.அபினேஷ் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புனர் N.அபினேஷ், வயது–28, த/பெ.நாகராஜ், கதவு எண்.58–26, திப்பையா நகர், தாளியூர் அஞ்சல், தொண்டாமுத்தூர், கோவை–641109. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. அய்யா, நான் கோவை, தொண்டாமுத்தூர், தாளியூர் அஞ்சல், திப்பையா நகரில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் பி.காம் வரை படித்துள்ளேன். நான் கடந்த 2025 நவம்பர் மாதம் முதல் கோவை, உடையாம்பாளையத்தில் உள்ள Rufi Real Estates & Investments Private Limited என்ற நிறுவனத்தில் அக்கவுண்டெண்டாக பணிபுரிந்து வருகிறேன். எனது நிறுவனமானது ரெட்ரீட் (Retreat) என்ற பெயரில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணிகளை செய்து வருகிறது. மேற்படி எங்களது நிறுவனம் கடந்த 2023 டிசம்பர் மாதத்தில் ஜி.எஸ்.டி போர்டல் மூலம் உதவி ஆணையர் (ST), சிங்காநல்லூர் வடக்கு சரகம், Dr.பாலசுந்தரம் ரோடு, கோவை அலுவலகத்திற்கு ஜி.எஸ்.டி வரி அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கையில் ரூ.2,24,118/– ஆக கோரப்பட (Claim) வேண்டிய ஜி.எஸ்.டி வரி தொகைக்கு பதிலாக ரூ.13,80,868/– என தவறுதலாக குறிப்பிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதனால் கடந்த 09.10.2025 அன்று உதவி ஆணையர் (ST) அலுவலகத்திலிருந்து ரூ.13,80,868/– ஜிஎஸ்டி துறைக்கு செலுத்தப்பட வேண்டுமென நோட்டீஸ் (Notice) எங்கள் நிறுவனத்திற்கு ஜி.எஸ்.டி போர்டல் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்பேரில், நாங்கள் அதிகமாகக் கோரப்பட்ட ரூ.11,56,750/– தொகையை திருப்பி (Reverse) அனுப்பி பதிவு செய்து, 05.12.2025 அன்று மேற்படி அந்த நோட்டீஸ்க்கு விளக்கத்தை (Reply) சமர்ப்பித்தோம். இது சம்மந்தமாக கோவை வணிக வரி அலுவலக வளாகத்தில் உள்ள சிங்காநல்லூர் உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்கள், எங்கள் நிறுவனத்தின் ஆடிட்டர் திருமதி.கௌசல்யா அவர்களிடம், எங்கள் நிறுவனத்தில் இருந்து நேரில் வந்து சிங்காநல்லூர் உதவி

ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்களை அவரது அலுவலகத்தில் சந்திக்குமாறு என்னிடமும், நிறுவன டைரக்டர் திரு.ராஜ் நடராஜன் அவர்களிடமும் தெரிவித்தார். அதன்பேரில் நிறுவனத்தின் டைரக்டர் திரு.ராஜ் நடராஜன் அவர்கள் இந்த நிறுவனத்தின் அக்கவுடண்ட் என்ற முறையில் மேற்படி ஜி.எஸ்.டி அலுவலக நிலுவை வேலைகளை என்னை பார்க்க சொன்னார். அதனால் நான் கடந்த 02.02.2026 ஆம் தேதி மதியம் 03.30 மணிக்கு உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்களை சந்தித்து என்னை அறிமுகப்படுத்தி கொண்டேன். அப்போது அவர் ஆடிட்டர் கௌசல்யா பேசினார்களா என்று கேட்டார். அதற்கு நான் ஆமாம் மேடம் எங்கள் டைரக்டர் சார், அவரின் அம்மாவின் பிறந்தநாள் விழாவிற்கு ஏற்பாடு செய்வதில் கொஞ்சம் பிசியாக இருந்து வருவதால் நேரில் வருவதற்கு தாமதம் ஆகிறது. அதற்கு அவர் உங்கள் சார் என்ன சொன்னார் என்று கேட்டார். அப்போது நான் உங்களை பார்த்து பைல் குளோஸ் செய்வதற்கு ஏன் லேட் ஆகுது என்று கேட்டு வரச்சொன்னார். அப்போது அவர் ஜி.எஸ்.டி நோட்டீஸ்க்கு விளக்கம் அளித்தது தொடர்பாக அவர் அதனை பார்த்துவிட்டு கூறுவதாகவும், அப்போது மீண்டும் அலுவலகத்திற்கு வந்து அவரை சந்திக்கும்படி தெரிவித்து எனது செல்போன் எண் 9025108702 ஐ வாங்கி கொண்டு செல்போனில் பேசும்போது வாட்ஸ்அப் காலில் தான் பேச வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் மறுநாள் 03.02.2026 ஆம் தேதி எங்கள் நிறுவனத்தின் ஆடிட்டர் திருமதி.கௌசல்யா அவர்கள் உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்கள் அவரை தொடர்பு கொண்டதாகவும், அப்போது மேற்படி எங்கள் நிறுவனம் அளித்த விளக்கம் தொடர்பாக அதனை சரிசெய்வதற்கு பணம் ரூ.1,00,000/– எதிர்பார்ப்பதாகவும், அதனால் அவரை நேரில் சந்திக்கும்படி கூறியதாக எங்களிடம் தெரிவித்தார். இது சம்மந்தமாக எங்கள் நிறுவன டைரக்டர் திரு.ராஜ் நடராஜன் அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்ததில் எங்கள் ஜி.எஸ்.டி கணக்குகள் சரியாக உள்ளதால் அவர் கேட்டபடி லஞ்சம் எதுவும் கொடுக்க வேண்டாம் என்று முடிவு செய்து, இருந்தாலும் உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்கள் வரசொன்னதன் பேரில் அவரை பார்த்து வாருங்கள் என்று என்னை அனுப்பிவைத்தார். அதன் அடிப்படையில் அடுத்தநாள் 04.02.2026 ஆம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில், நான் உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்தேன். அப்போது அவர் ஆடிட்டர் கௌசல்யா மேடம் உங்க ராஜ் நடராஜன் சார் கிட்ட பேசினாங்களா என்று கேட்டார். அதற்கு நான் ஆமாம் மேடம் நீங்க எங்க சார் கிட்ட 1 லட்சம் எதிர்பார்ப்பதாக ஆடிட்டர் கௌசல்யா மேடம்கிட்ட சொன்னீங்களாமா. அதற்கு டைரக்டர் சார் என்ன

சொன்னாரு என்று கேட்டார். அதற்கு நான், டைரக்டர் சார் கொஞ்சம் கம்மி பண்ணி பேச சொல்றாங்க, என்ன காரணம்ணா பணம் வெளிநாட்டில் இருந்து வர்றதால RBI க்கு ரிப்போர்ட் பண்ணனும், அவ்வளவு பண்டு கேஸ்ஷா எடுக்க முடியாது, எதாவது குறைச்சு பண்ண முடியுமா, பண்ணுங்க மேடம் என்று சொன்னேன். அதற்கு அவர் அங்கு வைத்திருந்த கால்குலேட்டரை எடுத்து அதில் 70000 என்று பதிவு செய்து என்னிடம் காண்பித்து இதனை கொடுத்து விடுங்கள் என்று சைகை செய்தார். அதற்கு நான், இவ்வளவு தொகை பண்ணுவாரா என்று தெரியாது, ரூ.50,000/–, அந்தமாதிரி வேணும்ணா பண்ணுவாரு மேடம் என்று சொன்னேன். அப்போது அவர் என்னுடைய பெயர் மற்றும் செல்நெம்பர் 9025108702 கேட்டு பெற்றுக்கொண்டு, மீண்டும் அவர் அதே கால்குலேட்டரை எடுத்து 60000 என்று பதிவு செய்து என்னிடம் காண்பித்து அதனை கொடுத்துவிடும்படி சைகை செய்தார். அதற்கு நான் ரூபாய் 60 ஆயிரங்களா என்று கேட்டேன், அதற்கு அவர் ஆமாம் 60 ஆயிரம் என்று மெதுவாக சொன்னார். நான் சரிங்க மேடம் டைரக்டர் சார்கிட்ட பேசி பார்க்கிறேன். அப்படி பணத்தோட வரதுணா எப்ப வரதுங்க என்று கேட்டேன். அதற்கு அவர் அந்த பணத்தை வெளியில் வைத்து வாங்கி கொள்வதாக சொன்னார். அதற்கு அவர் பணம் ரெடி பண்ணிட்டு சொல்லுங்க என்றார். டைரக்டர்சார் கிட்ட நிறுவன கேட்டுட்டு, சாருடைய பர்சனல் அக்கவுண்டில் இருந்து தான் எடுத்து வர முடியும், எடுத்துட்டு நானே உங்களை கூப்பிடுறேன். நீங்கள் எங்க வரணும்ணு சொல்லுங்க, நான் வரேன் என்று சொன்னேன். அதற்கு அவரும் சரிங்க என்று சொன்னார். அடுத்த நாள் 05.02.2026 ஆம் தேதி எங்கள் நிறுவனத்தின் ஆடிட்டர் திருமதி.கௌசல்யா அவர்கள் எனக்கு சிங்காநல்லூர் உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்கள் என்னை தொடர்பு கொள்ள முயற்சித்ததாகவும், லைன் கிடைக்கவில்லை என்றும், அவருக்கு போன் செய்து பேசும்படியும் எனது செல்போன் எண் 9791492859 க்கு வாட்ஸ்அப்பில் காலை 09.08 மணிக்கு செய்தி அனுப்பியிருந்தார். அப்போது நான் கொஞ்சம் பிசியாக இருந்ததால் நான் கவனிக்கவில்லை. அதன்படி நானும் மாலை 05.12 மணிக்கு எனது செல்போன் நெம்பர் 9791492859 ல் இருந்து ஆடிட்டர் கௌசல்யா அவர்களின் செல்போன் நெம்பர் 9940958195 க்கு பேசி மேற்படி அவர் வாட்ஸ்அப்பில் அனுப்பிய தகவலை உறுதி செய்து கொண்டு, அவரிடம் சிங்காநல்லூர் உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்களின் செல்நெம்பர் 9597553655 ஐ பெற்றுக்கொண்டேன். அதன் பின்னர் மாலை சுமார் 05.20 மணிக்கு சிங்காநல்லூர் உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்களிடம் எனது மற்றொரு செல்நெம்பர் 9025108702 ல் இருந்து வாட்ஸ்அப் காலில் அவருக்கு போன் செய்து பேசிய போது அவர் தான் கேட்ட பணம் ரெடியாகிவிட்டதா

என்று கேட்டார். அதற்கு நான் நிறுவனத்தின் டைரக்டர் திரு.ராஜ் நடராஜன் அவர்கள் வெளியூர் சென்றிருப்பதால் வரும் திங்கள் அல்லது செவ்வாய்கிழமையில் பணத்தை ரெடிசெய்துவிட்டு போன்செய்வதாக கூறினேன். அதற்கு அவரும் சரி என்று கூறி போனை வைத்துவிட்டார். இந்த விவரத்தை எனது நிறுவனத்தின் டைரக்டர் திரு.ராஜ் நடராஜன் அவர்களிடம் சொல்லி கலந்து ஆலோசனை செய்ததில், உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்களுக்கு லஞ்சமாக பணம் எதுவும் கொடுக்க வேண்டாம் என்றும், அவர் மீது கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுக்கலாம் என்று டைரக்டர் அவர்களும் நானும் முடிவு செய்து, என்னை புகார் கொடுக்க சொன்னார். எங்கள் நிறுவனத்தின் Excess Input Tax Credit தொடர்பான கோப்பை முடித்து தருவதற்கு பணம் ரூ.60,000/– லஞ்சமாக சிங்காநல்லூர் உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி அவர்களுக்கு கொடுக்க எனக்கும் விருப்பமில்லை என்பதால் உதவி ஆணையர் (ST) திருமதி.மகேஸ்வரி மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/, 07.2.26 (N.Abinesh) இடம் – கோவை, தேதி – 07.02.2026. மேற்படி புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டது, எனவே எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 09.02.2026 ம் தேதி காலை 07.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2026/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன்படி மேற்படி எதிரி திருமதி.மகேஸ்வரி, உதவி ஆணையர் (ST), சிங்காநல்லூர் வடக்கு சரகம், Dr.பாலசுந்தரம் ரோடு, கோவை என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Madam, Received the above complaint on 07.02.2026 at 18.00 hrs. Sd/- x-x-x-x 07/02/2026 (G.Arumugam), Inspector of Police, V&AC, Coimbatore. Madam, after conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.02/2026/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 09.02.2026 at 07.00 hrs. Sd/- x-x-x-x 09/02/2026 (G.Arumugam), Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார்மனு ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, முதன்மை

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

9/2/2026

(G.ஆறுமுகம்)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.